# மறுவரையறை ஆணையம்
# தமிழ்நாடு

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் – tnsec.tn@nic.in இணையதளம் – www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண் 65/2021 நாள்: 21.12.2021

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தாம்பரம் மாநகராட்சி மற்றும் இதர 6 நகராட்சிகளின் வார்டு மறுவரையறை தொடர்பாக, தமிழ்நாடு மறுவரையறை ஆணையத்தின் சார்பில் கருத்துக் கேட்பு கூட்டம் தாம்பரம், முத்துலிங்கம் தெரு, தாம்பரம் மாநகராட்சி கல்யாண மண்டபத்தில் 23.12.2021 வியாழன் அன்று நடைபெறவுள்ளதாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுருந்தது.

தற்போது, நிர்வாக காரணங்களை முன்னிட்டு, கூட்ட நேரம் மாற்றியமைக்கப்பட்டு, மேற்குறிப்பிட்ட நாளில் காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை நடைபெறும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களின் வார்டு மறுவரையறைக்கு உட்படும் குன்றத்தூர் நகராட்சி, மாங்காடு நகராட்சி, தாம்பரம் மாநகராட்சி, நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி, பொன்னேரி நகராட்சி, திருநின்றவூர் நகராட்சி மற்றும் சோளிங்கர் நகராட்சி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு, தங்களின் ஆட்சேபனைகள், கருத்துக்களை நேரடியாக தெரிவித்துக் கொள்ளலாம், மேலும் இதன் விவரங்களை மனுவாகவும் வழங்கலாம்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு மறுவரையறை ஆணைய தலைவர் முனைவர் வெ. பழனிகுமார், இ.ஆ.ப., (ஓய்வு), அவர்கள், மறுவரையறை ஆணைய உறுப்பினர்/ செயலர் திருமதி. எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள், உறுப்பினர் / நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள், சம்பந்தப்பட்ட மாவட்ட மறுவரையறை அலுவலர்கள் / மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்க உள்ளனர்.

(மறுவரையறை ஆணைய ஆணைப்படி)

ஒப்பம்/–
மக்கள் தொடர்பு அலுவலர்